பக்கங்கள் எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 24 வியாழக்கிழமை (09.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 253

## மன்னார் சிலாவத்தையில் நேற்றுமாலை இடம்பெயர்ந்தோர் குடியிருப்புகள் மீது குண்டு வீச்சு

கிளிநொச்சி, ஓக.9

மன்னார் தெற்கில், சிலாவத்தை மற்றும் கொக்குப்படையான் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் 'கிபீர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தின.

மன்னார் தெற்குப் பகுதி மீது அண்மையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து, மக்கள் குடியமர்ந்த இந்தப் பகுதிகளை நோக்கியே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் இரு வீடுகள் சேதமடைந்துள்ளன. மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடியதால் சேதங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் இரு இடங்களில் புலிகள் நேற்றுத் தாக்குதல்

### 4 படையினர் பலி மற்றும் நால்வர் காயம்

கிளிநொச்சி, ஓக.9

அம்பாறை மாவட்டத்தில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் இரு இடங்களில் விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சிகுடிச்சாறுப் பகுதிக்குள் ஊடுருவும் நோக்குடன் வந்த படையினருடன் மோதல் இடம்பெற்றது என்றும், அந்த மோதலில்,

(08ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கை அரசுப் படைகள் மீட்பதை தடுக்கவே ஐ.நா. அதிகாரி வருகை!

## பன்குளத்தில் மோதல்

திருகோணமலை பன்குளப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும், அரசபடையினருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. இந்த மோதலில் விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று படைத்தரப்பினர் கூறுகின்றனர்.

அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் என்றும், அதன் பின்னர் தாம் நடத்திய பதில்த்தாக்குதலிலேயே விடுதலைப் புலி இயக்க உறுப்பினர் இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் படையினர்மேற்கொண்ட தேடுதலில் விடுதலைப் புலி உறுப்பினர் இருவரின் சடலங்கள் மற்றும் ரி - 56 ரகத் துப்பாக்கி, தொலைத் தொடர்புக்கருவிகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் படைத்தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. இந்தச் சம்பவம் தொடர் பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவலும் வெளிவரவில்லை. (சி)

## நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 09

"கிழக்கை முற்றாகக் கைப்பற்றி அங்கு புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டி, ஜனநாயகத்தை நிலைநாட்டியிருக்கும் அரச படையினர் வடக்கையும் கைப்பற்ற முயலுகின்றபோது அதற்கு சர்வதேச நாடுகள் முட்டுக்கட்டை போடுகின்றன. தற்போது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஐ. நா. உயரதிகாரி ஜோன் ஹோம்ஸும் அந்தத் தீய நோக்குடனேயே இங்கு வந்திருக்கிறார். அரசு இத்தகைய நயவஞ்சகச் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது".

- இவ்வாறு ஜே. வி. பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் அக்கட்சியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ, ஐ. நா. பிரதிநிதியின் இலங்கை வருகையைக் கண்டித்து நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ. நாவின் பிரதிநிதியாக ஜோன் ஹோம்ஸ் தற்போது இலங்கைக்கு வந்திருக்கிறார். இவரைப் போன்றோர் இலங்கைக்கு வருவது தீய நோக்கங்களுடன்தான்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன, இலங்கை அரசே இதில் ஈடுபடுகின்றது என்று சர்வதேச நாடுகளில் பொய்யான பிரசாரங்களைப் பரப்பி, இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தியை ஏற்படுத்த ஹோம்ஸ் போன்றவர்கள் முயலுகின்றனர். இவ்வாறானவர்கள் இலங்கைக்கு வந்து சென்றதன் பின்புதான் இலங்கையின் பெயர் சர்வதேச மட்டத்தில் கெட்டுப் போகின்றது.

இவர்கள் போன்று பலர் இங்கு வந்து சென்றிருக்கின்றனர். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது நாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் அவப்பெயரே ஏற்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதநேய சங்கத்தின் பொதுச் செயலாளரும், அவசர இடர் நிவாரண தொடர்பாளருமான ஜோன் ஹோம்ஸ்விசேடவிஜயமொன்றைமேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ளார். இவ்வாறான பதவி ஒன்றை வகிக்கும் ஐ.நா. மன்ற பிரதிநிதியொருவர் நாடொன்றுக்கு விஜயம் செய்வதாயிருந்தால், அது அந்த நாட்டில் பாரதூரமான 'மனிதநேய நெருக்கடியொன்று' இருப்பதாக உலக கருத்தொன்றைக் கட்டியெழுப்புவதற்காகவேயாகும்.

இந்த விஜயத்தின் பின்னர் அவர் உலகத்துக்கு எதைக் கூறினாலும் - இலங்கையை பாரதூரமான மனிதநேய நெருக்கடியொன்றுக்குப் பலியாகிக் கொண்டிருக்கும் ஒரு நாடாகவே அவருடைய இலங்கை விஜயம் உலகுக்குக் கூறப்போகிறது - என்றார் அவர். (சி)

## தெல்லிப்பழை, சேந்தாங்குளம் ஊடாக பக்தர்கள் கீரிமலைக்குச் செல்லஅனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 9

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெறும் ஆடிஅமாவாசைத் தீர்த்தத் திருவிழாவில் பங்குபற்றும்பக்தர்கள் தெல்லிப்பழை மற்றும் சேந்தாங்குளம் சோதனை நிலையங்கள் ஊடாகச் செல்ல வசதிசெய்யப்படும்.

யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் இதனை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தலைமையகம் நேற்றிரவு செய்திக்குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த 19ஆம்திகதிமுதல் நடைபெற்று வரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குப்பக்தர்கள் சென்றுவர விசேட போக்குவரத்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## செல்வச்சந்நிதி ஆலய கொடியேற்ற நாளில் அச்சுவேலி சோதனை நிலையம் திறக்கப்படும்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவைமுன்னிட்டு கொடியேற்றதினத்தன்று அச்சுவேலி சோதனை நிலையம் ஊடாகப் பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் இதனை அறிவித்துள்ளது.

அன்றையதினம் காலையில் இருந்து மதியம் வரை இந்தச் சோதனை நிலையம் திறந்துவைக்கப்படும். அங்கிருந்து பக்தர்கள் ஆலயம் சென்றடையப் போக்குவரத்து வசதிகள்செய்யப்படும். விசேட பஸ்கள் படையினரின் பாதுகாப்புடன் சோதனை நிலையத்தில் இருந்து ஆலயம்வரை செல்லும். (1)

## கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய நீண்டநேர வெடியோசைகள்

கொழும்பு, ஓக.9

கொழும்புத் துறைமுகத்திலிருந்து நேற்றுக் கிளம்பிய வெடிச்சத்தங்களால் தலைநகரில் பெரும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

பெரும் சமர் இடம்பெறுவது போன்று மதியத்திலிருந்து நீண்ட நேரம் தொடர்ந்த இந்த வெடியோசைகள் வெறும் ஒத்திகை நடவடிக்கை எனப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர்

கொழும்பு,ஓக.9

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து வவுனியா நகரில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் சிக்கி இரு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

வவுனியா - தோணிக்கல் , குட்ஷெட் வீதி யில், நேற்று மதி யம் 1.10 மணியளவில் வெடித்த கிளைமோரில் சிக்கிப் படையினர் படுகாயமடைந்தனர். சம்பவத்தைத் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. (சி)

## புலிகளின் மோட்டார் தாக்குதல்; மணலாறில் ஊர்காவலர் பலி !

கொழும்பு, ஓக. 9

மணலாறு, கல்யாணபுரப் பகுதியிலுள்ள படையினரின் முன்னரங்கக் காவலரண் மீது நேற்றுகாலை 6.30 மணியளவில் புலிகளால் மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான - சம்பந்தப்பட்ட - முன்னரங்கக் காவலரணில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' ஆசிரியரின் கூற்று சம்பந்தமாக தகவல் திணைக்களப் பணிப்பாளர் மறுப்பு

கொழும்பு, ஓக.9

'சுடர் ஒளி' ஆசிரியர் என்.வித்தியாதரன் தெரிவித்தவை என்று குறிப்பிட்டு மனித உரிமைகள் அவதானிப்பு மையத் தின் (Human Rights Watch) இலங்கை பற்றிய பிந்திய அறிக்கையில் வெளியான சில அம்சங்களை இலங்கை அரசின்தகவல்திணைக்களஇயக்குநர் அனுர பல்பிட்ட மறுத்திருக்கிறார்.

மேற்படி மனித உரிமைகள் அவதானிப்பு மையத்துக்கு அவர் நேற்று இது தொடர்பாக அனுப்பிய கடிதத்தின் பிரதி சில ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதில் அரச தகவல் திணைக்கள இயக்குநர் தெரிவித்திருப்பதாவது:-

உங்கள் அறிக்கை தவறாக வழிநடத்தப்படுவதும் முரண்பாடுகள் நிறைந்ததும் ஆகும். அது, உறுதிப்படுத்தப்படாத, ஆதாரப்படுத்தப்படாத குற்றச்சாட்டுக்களையும், காலவதியான தகவல்களையும் கொண்டது என்றே கூறவேண்டும்.

ஆனாலும் viii ஆம் பிரிவில் - வெளிப்படுத்தலுக்கும் கூட்டிணைவதற்குமான

(08ஆம் பக்கம் பார்க்க)

## கைதடியில் நேற்று விடிகாலையில் இருவர் வெவ்வேறு இடங்களில் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம்,ஓக்.9

கைதடிப் பகுதியில் வைத்து இருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கைதடி தெற்கைச் சேர்ந்த முருகேசு ராஜ்கண்ணன் (வயது-30) என்பவர் நேற்று புதன்கிழமை அதிகாலை 5.15 மணியள வில் வீட்டில் படுக்கையில் வைத்து இனந் தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கைதடி வடக்கைச் சேர்ந்த சண்முகலிங்கம் சித்திரவேல் (வயது-39) என்பவரின் வீட்டுக்கு நேற்று அதிகாலைசென்ற ஆயுததாரிகள் அவரை வீட்டுக்குவெளியே அழைத்துச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச்சென்ற சாவகச்சேரி நீதிவான் மரணவிசாரணைகளை மேற் கொண்டதுடன் பிரேதபரிசோதனைக்காகச் சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இருவரும் உறவினர்கள் என்று அறியப்படுகிறது.

(அ-50-75-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
சிவஞானரத்தினம் சிவகாந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
**சுப்பிரமணியம் சிவஞானரத்தினம்**
அவர்கள் காலமான செய்திகேட்டு நாம் மிக அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி. (சி- 53196) **கல்லூரிச் சமூகம்.**

# மரண அறிவித்தல்



## கந்தையா பரநிருபசிங்கம் (நடேஸ்)

புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரநிருபசிங்கம் 07.08.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா – தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், கமலாசினியின் அன்புக் கணவரும் நேசமலர், கதிர்காமநாதன், தவமலர், குகநாதன், நிசாந்தன், காலஞ்சென்றவர்களான நேசராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [09.08.2007] வியாழக்கிழமை அவரது மைத்துனர் இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுருவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை. (63459)
தகவல்: க. மகேஸ்வரன் [மைத்துனர்].

# வடக்கு - கிழக்கு அரச ஊழியருக்கென பொதுப் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைக்கு

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு பொதுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.

அடுத்த பாதுகாப்பு சபைக்கூட்டத்தின்போது இது தொடர்பாக விசேட கவனஞ்செலுத்தப்படவிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை ஊழியர்களை நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்தித்தபோது, அவர் இதனைத் தெரிவித்தார்.

சிவில் நிர்வாகத்தை சீர்குலைத்து மக்களின் இயல்பு வாழ்க்கையை ஸ்தம்பிதம் அடையச் செய்வது பயங்கரவாதச் சக்திகளின் நோக்கமாகும் - என்று ஜனாதிபதி தெரிவித்தார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் அரச உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்கு நிதி மற்றும் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். எதிர்காலத்தில் 60 வயதை அடையும் அரச ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதாயின் அதற்கு அமைச்சரவையின் அனுமதியைப்பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ-1)

## தவறிவிட்டது

சித்தன்கேணிச் சந்திக்கும் மானிப்பாய்ச் சந்திக்கும் இடையில் 04.08.2007 சனிக்கிழமை தியாகராஜக் குருக்கள் பத்மநாதசர்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (810522119V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அராலி தெற்கு, மாதாங்கோயிலடி, வட்டுக்கோட்டை. (தொ.பே. 0777159735) எனும் முகவரிக்கு அனுப்பவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (63464)

## விற்பனைக்கு

LG Single Door Frige (Silver Colour)
2 மாதங்கள் பாவித்தது. உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : L.றமணன்,
பிரதேச செயலகம், சண்டிலிப்பாய். தொ.பே. 077 6557498.

## தோண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் - 2007

தற்காலிக வியாபாரிகளுக்கான நகராட்சி மன்றத்தின் அறிவித்தல்

மேற்படி ஆலய மகோற்சவ காலத்தில் அங்கு தற்காலிக வியாபாரத்தில் ஈடுபடுவோர் அதற்குரிய உத்தரவுப் பத்திரத்தை ஆலயச் சூழலிலுள்ள நகராட்சி மன்ற உற்சவ கால அலுவலகத்தில் பெற்று தங்கள் வியாபாரத்தை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
06.08.2007 (சி/53190)

**கு.அமிர்தலிங்கம்,**
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

## CCHS

CATHOLIC COLLEGE OF HIGHER STUDES

**ENGLISH COURSE**

**New Batch Begins on** 10 - 09 - 2007
**Apply Before** 21 - 08 - 2007

Minimum Qualification: Pass in O/L With English
Forms are available at the Office
On Weekdays Between 3.30 - 5.30 p.m
Admission Test: 26 - 08 - 2007 at 10.a.m.

*Ahavoli*
*St.Patrick's Road,*
*Jaffna.*
**Registrar** (63441)

## விடுமுறைக் காலத்தில்

**A/L 2008, 2009**
கலைப்பிரிவு மாணவர்களிற்கு - புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
20 வகுப்புகள் அனைத்துப் பாடங்களும் முற்றிலும் இலவசம்
அனுமதிக்கு முந்துங்கள்
மதுரம் இன்ஸ்ரிரியூட், கட்டப்பிராய்.

## வெற்றி வழி A/L தமிழ் நாக.தமிழிந்திரன்

2008 மீட்டல் Paper } புதிய
2009 ஆரம்பநிலை நிந்து } பிரிவு
★ குறிப்புகள் வழங்கப்படும்
★ யாவர்க்கும் 20 விசேட வகுப்புகள் இலவசம்.
★ பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தியாக்கப்படும்.
மதுரம் இன்ஸ்ரிரியூட், கட்டப்பிராய்.

## Hatton National Bank

### அடகுப்பொருள்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.05.2006இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருள்கள் 18.08.2007 சனிக்கிழமை அன்று இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்கமுடியாவிட்டால்,

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

(சி/53193) **முகாமையாளர்.**

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

905 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் **04 08 12 33**

07-08-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4211984 - 4227480

ஜக்பொட் பரிசு ரூபா.1,738,650/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 342,545 | 10/- | 3,425,450/- |
| 2 இலக்கங்கள் | 31,440 | 20/- | 628,800/- |
| 1 இல. + லக்கினம் | 31,163 | 30/- | 934,890/- |
| 2 இல. + லக்கினம் | 2,866 | 100/- | 286,600/- |
| 3 இலக்கங்கள் | 857 | 500/- | 428,500/- |
| 3 இல. + லக்கினம் | 70 | 5,000/- | 350,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,738,650/- | 1,738,650/- |
| மொத்தம் | | | 8,192,890/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 408,951 | | 9,216,390/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5100646 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 4223063-8-11 |
| கண்டி | 4217328-7-27 |
| பொலன்னறுவை | 4214357-8-97 |
| கொழும்பு | 4225087-4-55 |
| மாத்தளை | 4222908-8-48 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

# மரண அறிவித்தல்



## அப்புத்துரை கதிரவேல்பிள்ளை

(சுதுமலை, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை கதிரவேல்பிள்ளை அவர்கள் கடந்த திங்கட்கிழமை (06-08-2007) அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும் மனோன்மணி - காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மருமகனும் சத்தியா அவர்களின் அருமைக் கணவரும் கோசலா, மோகன்தாஸ் (மருத்துவப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), ஜலந்தரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிதம்பரநாதன், கார்த்திகைக்குமார், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலா, தயா, சசி, மகாதேவி, சுந்தரகுமாரி, வேலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-08-2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப. 2 மணியளவில் பொரளை கனத்தை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45,Srimal Avenue,
Off Quarry Road,
Dehiwela.
Tel.2718215
தகவல்: மனைவி, பிள்ளைகள். (சி/53145)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## யோசப் பற்றிக்

மலர்வு: 1938.05.21
உதிர்வு: 2006.08.10

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதையா உன் பிரிவு
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால் யாவருக்கும்,
இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
நினைவிழக்க முடியாமல் நாம்
நீந்துகின்றோம் கண்ணீர்க் கடலில்.

**இந்நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காப் பிரார்த்திக்கிறோம்.**

இல. 149, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம். (63458)
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 15 - 06 - 1959



உதிர்வு 11 - 07 - 2007

கடந்த 11.07.2007 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## திருமதி சகுந்தலாதேவி தங்கராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.08.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன், அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது வருகை தந்தோருக்கும், எமது துயரில் பங்குகொண்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷனி அம்பிகையின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

*உங்கள் நினைவுகளுடன்:*
கணவர், பிள்ளைகள், அப்பா,
அம்மா, சகோதரர்கள், சகோதரிகள். (சி/53182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமத்தில் திடீர் திடீரென மின்வெட்டு; பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் பாதிப்பு!

## மண்எண்ணெய் விளக்கில் கல்வி பயிலும் அவலம்

யாழ்ப்பாணம்,ஒக.9

வலிகாமத்தின் சில பிரதேசங்களில் அண்மைக்காலமாக எவ்வித முன்னறிவித்தலுமின்றித் திடீர் திடீரென பலமணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இதனால் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, ஏழாலை, உடுவில், சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிலேயே அடிக்கடி நீண்டநேரம்-சில வேளைகளில் இரவு முழுவதும் - மின்விநியோகம் தடைப்படுகின்றது. சில நாள்களில் மாலை 6 மணிக் குத் தடைப்படும் மின் விநியோகம் மறுநாள் காலை 6 மணிக்கே வழங்கப்படுகின்றது.

தற்போது ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை நடைபெற்று வருகின்றது. அடுத்தவாரம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைகளுக்குப் படிக்கும் மாணவர்கள் இந்த மின்வெட்டால் உரிய முறையில் பாடங்களை, மீட்டல் செய்து படிக்க இயலவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. சில பகுதிகளில் மண்எண்ணெய் விளக்கை பயன்படுத்தி மாணவர்கள் இரவு நேரங்களில் மிகுந்த சிரமங்களுடன் படிப்பை மேற்கொள்வதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.(அ-1-202-68)

## பண்டத்தரிப்பில் காலபோக விதைநெல் பெற பதிவு செய்ய அறிவுறுத்து

வலி.தென்மேற்கு, ஒக்.9

பண்டத்தரிப்புப் பகுதியில் காலபோக நெல் விதைப்பில் ஈடுபடவுள்ள விவசாயிகள் மூன்றுமாத மற்றும் மூன்றரைமாத விதை நெல்லைப் பெறுவதற்கு விவசாயிகள் சம்மேளனத்தில் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனம் விவசாயிகளுக்கு இவ்வாறு இவ்வாறு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை ஏ.ரி.402 என்ற நான்கு மாதகால விளைச்சலைக் கொண்ட விதை நெல் கிடைப்பது சாத்தியம் அற்றது என்று சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (203-135)

## வடமராட்சியிலும் கோப்பாயிலும் புலமைப்பரிசில் மாணவருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக.9

புலமைப்பரிசில் பரீட்சை யில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வடமராட்சியிலும் கோப்பாயிலும் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் மாபெரும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சியில் கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் இன்று வியாழக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரைக்கும் கோப்பாயில் கோப்பாய் ஆசிரியகலாசாலையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2.30 மணி வரைக்கும் இந்த வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

யுனிலங்காவின் ஆதரவுடன் நடத்தப்படவுள்ள இந்த வகுப்பில் திருமலையில் இருந்து வருகைதரும் திருகோணமலை ஆசிரிய ஆலோசகர் எஸ்.கணேசலிங்கத்துடன் இணைந்து கோப்பாய் ஆசிரியகலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் கே.தவயோக ராசா ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

இப்பயிற்சியில் மாணவர் கலந்து கொள்வதற்கான பதிவுகளை கோப்பாய் ஆசிரிய கலாசாலை, யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை, சுன்னாகம் துர்க்கா புத்தகசாலை, நெல்லியடி மொடேன் புத்தகசாலை, மீசாலை நியூ மற்ஸ் அக்கடமி, நல்லூர் சயன்ஸ் அக்கடமி ஆகியவற்றில் மேற்கொள்ளமுடியும்.

பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள முடியாத மாணவர்கள் மேற்படி இடங்களில் பதிவுகளை மேற்கொண்டு கையேடுகளைப் பெறமுடியும்.

போக்குவரத்து வசதிகள் தேவைப்படுவோர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளருடன் 222 2877 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பஸ்சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். (203)

## பருவமழைக் காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் வழுக்கையாற்றுப் பகுதியைத் திருத்துமாறு கோரிக்கை

வலிதென்மேற்கு,ஒக.9

பருவமழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக வழுக்கையாற்று படுகை பிரதேசத்திலுள்ள குளங்கள், அவற்றின் வாய்க்கால்கள் மற்றும் நீர் வெளியேற்றத்தை தடுப்பதற்காகப் போடப்பட்டிருக்கும் துருசுக் கடவைகள் ஆகியவற்றை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீர்ப்பாசன திணைக்கள (வடக்கு) பிரதிப் பணிப்பாளர் ஏ.சி.வினோத்ராஜூக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.மா.க முதலியார் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

குளவாய்க்கால்கள் மற்றும் துருசுக்கடவைகளைப் புனரமைப்பு செய்யாத விடத்து எதிர் வரும் மாரிகாலத்தில் வழுக்கையாற்றின் வெள்ள நீர் அராலிக் கடலில் வீணாகச் சென்று சங்கமிக்கும் நிலை ஏற்படும் என்று மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் வழுக்கையாற்றின் வெள்ள நீரானது தொடப்பு வாய்க்கால்கள் மூலம் 20இற்கும் மேற்பட்ட குளங்களுக்குச் சென்றிருந்தது.

இதனால் அப்பகுதிகளிலுள்ள நெற்காணிகளில் ஈரலிப்பு மற்றும் வெள்ளம் நின்று நெற்பயிர்களின் பசுமை வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்து வந்துள்ளது என்றும் இம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதி யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(203-135)



மாதிரி பிரதேச செயலகங்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் யாழ்.பல்கலைகழக முகாமைத்துவ கற்கைநெறிகள் பீடத்தினைச் சேர்ந்த பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

## வயற்காணிகளின் விவரம் நாவற்குழி கிழக்கில் சரிபார்ப்பு

யாழ்ப்பாணம், ஒக.9

நாவற்குழி கிழக்கு விவசாயிகள் சம்மேளனத்தின் பிரிவில் 2007/2008 காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் வயல்காணிகள் நேரடியாக விவசாய சம்மேளனத்தினரால் பார்வையிடப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட வுள்ளன.

இவர்களுடன் கமநலகேந்திர நிலைய பெரும்போக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ஆகியோரும் இணைந்து செயற்படவுள்ளனர்.

றெணிப்பன் வயல்வெளி, பிள்ளையார் கோயிலடி, திருவர்காடு வயல்பிரதேசம் ஆகிய பகுதிகளில் வயல்நிலங்கள் உள்ளவர்கள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி கிழக்கு றெணியன் மருதடி வைரவர் ஆலய முன்றலுக்கும் புன்னையடி, மொட்டையாலடி, வலக்கடவை, கோப்பாயன்கிராய், வீரபத்திரர் கோயிலடி ஆகிய வயல் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9 மணிக்கு தச்சன்தோப்பு முருகன் ஆலய முன்றலுக்கும் வருகைதந்து தமது வயல் நிலங்களை பார்வையிடுவதற்கு உறுதி செய்து கொள்ளுமாறு நாவற்குழி கிழக்கு விவசாய சம்மேளனச் செயலாளர் கேட்டுள்ளார். (203)

## காரைநகரில் 35 பேர் 'கற்றாக்' நோயால் பாதிப்பு

குருநகர், ஒக.6

காரைநகர் பிரதேசத்தில் 35 பேர் 'கற்றாக்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

காரைநகர் கடற்படையினரின் ஏற்பாட்டில் காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலையில் கண்சிகிச்சை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது.

கண் பரிசோதனையைக் காரைநகர் கடற்படைமுகாமைச் சேர்ந்த டாக்டர் பிரசன்னா நடத்தினார். இம்முகாமில் 120இற்கும் மேற்பட்டோர் கண்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களுள் 35 பேருக்கு 'கற்றாக்' வெண்படல நோய் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நோயாளர்களுக்கு இரண்டு மாதங்களில் 'கற்றாக்' சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-51)

## பதவிவெற்றிடங்கள்: விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம், ஒக.9

அரசாங்க அச்சுத்திணைக்களத்தினால் இலங்கை அச்சிடற் சேவை வகுப்பு III தரம் III இல் புத்தகம் கட்டுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உரிய விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

புத்தகம் கட்டுவதிலும் 10 வருட அனுபவம் கொண்டவர்களும் தொழில்நுட்பக் கல்லூரியில் புத்தகம் கட்டுநர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை 27.07.2007ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்களை 'அரச அழுத்தகர், அரசாங்க அச்சுத்திணைக்களம், அஞ்சல் பெட்டி இல.507, கொழும்பு 08' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-86)


* * *

யாழ்ப்பாணம், ஒக.9

தென்மராட்சி பிரதேச செயலக தொழிற் பயிற்சிப் பிரிவில் நடத்தப்படும் நீர்க்குழாய் பொருத்துதல் பயிற்சிநெறியின் போதனாசிரியர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த துறையில் ஒருவருட பயிற்சிச் சான்றிதழ் உள்ள 18-48 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பிரதேச செயலக தொழிற்பயிற்சிப் பிரிவில் உடனடியாகக் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)




## ஒகஸ்ட் மாதத்திற்கான ஓய்வூதியம் இன்று

வலிதென்மேற்கு,ஒக.9

அரசாங்க ஓய்வூதியர்களுக்கான ஒகஸ்ட் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை வங்கிகளில் வழங்கப்படவுள்ளது.

(203-135)

## மரக்கன்று விநியோகம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் வடக்கு ஆகிய பகுதிகளில் பயனுள்ள மரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

ஆயிரம் ரூபா பெறுமதியான தேசி, மாதுளை, ஜம்புநாவல், தென்னங்கன்று, மாங்கன்று ஆகிய பயன்தரு மரங்கள் முதல் கட்டமாக வழங்கப்பட்டது.

ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் அலுவலகத்தில் கிராம சேவையாளர் வை.சந்திரராஜா தலைமையில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.(203-100)

## அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சு 3 மாத நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஒக.9

குடாநாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

மஹிந்த சிந்தனை அடிப்படையில் மாதாந்தம் 3ஆயிரம் ரூபா வீதம் கடந்த ஜூன் மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த உதவித்தொகை வழங்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவ் வேலைத்திட்டத்தின் முதற்கட்டக் கொடுப்பனவுக்கென யாழ்.குடாநாட்டில் 64 பேர் தகுதி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மூன்று மாதத்திற்குரிய [illegible] வில் அமைச்சர் [illegible] வழங்கப்பட்டு இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும்.

கொடுப்பனவு பெறுபவர்களின் விவரம் வருமாறு:

*யாழ்ப்பாணம்* - எஸ்.லூத்தம்மா, என்.சிறிஸ்கந்தராசா, ஆர்.கமலாம்பிகை, எஸ்.தேவமலர், எம்.டெரன் ஜோன்சன்

*சண்டிலிப்பாய்* - எஸ்.ராதாகிருஸ்ணன், வி.மகேந்திரராஜா, எஸ்.செல்வராணி, கே.பேரின்பநாதன், கே.கமலேஸ்வரன்.

*நெடுந்தீவு* - கே.மருதய்யனார், ரி.அருந்தவநாதன், எ.சகாயநாதன், எஸ்.மலர்ராணி, எ.எ.ஜேசுதாசன்.

*பருத்தித்துறை* - எஸ்.ஜெயரஞ்சினி, ஆர்.சுதாகரன், எஸ்.யோகம்.

*காரைநகர்* - கே.பேரின்பநாயகம், ஆர்.தர்சிகா, பி.ஜெயகௌரி, எஸ்.இரத்தினராசா, வி.நீலாம்பிகை, கே.சுந்தரவேல்.

*கோப்பாய்* - எஸ்.இரத்தினம், ஏ.மாணிக்கம், ஆர்.ராசகுலேந்திரம்.

*[illegible]* - வி.செல்லம்மா, எம்.ஆறுமுகம், ஆர்.மங்கயற்கரசி, எஸ்.விமலன், எஸ்.தங்கராசா.

*வேலணை* - எஸ்.சிவராசா, கே.சிவராசா, எம்.புவனேஸ்வரி, எஸ்.சொர்ணம்.

*உடுவில்* - ரி.சபாரத்தினம், என்.நாகேந்திரம், வை.ஏ.மரியராசா, எம்.அருமைத்துரை, எ.சுகந்தி.

*ஊர்காவற்றுறை* - ரி.பத்மாவதி, ஜி.நாகமுத்து, ஆர்.சகாயமலர், பி.திருஞானசோதி, எஸ்.ரவீந்திரன்.

*நல்லூர்* - எஸ்.ஜெகசோதிநாதன், கே.கனகலிங்கம், ஏ.வேலாயுதம், பி.மகாதேவன், எம்.கந்தப்பிள்ளை.

*தெல்லிப்பழை* - கே.கணேசமூர்த்தி சர்மா, எம்.மோகனச்சந்திரன், கே.ஜெயராசசிங்கம், ஆர்.ஜேசுதாசன், எஸ்.வல்லிபுரம்.

*சங்கானை* - வி.பாசமலர், கே.நாகராசா, எஸ்.மரியராசா, எஸ்.கிருஷ்ணகுமார்.

*சாவகச்சேரி* - வி.மார்க்கண்டு, ஆர்.கந்தசாமி, வி.பவளநாயகி.

(202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் ஆயுள் காப்புறுதித் துறையில் முதல்வனான செலிங்கோ லைவ் (F) (CEYLINCO LIFE) தனது சுன்னாகம் கிளைக்கு ஆளணி வளத்தினை அதிகரிப்பதுடன், இளமையும் துடிப்பும் உள்ள இளைஞர், யுவதிகளிற்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் பின்வரும் பதவிகளிற்குத் தகுதியுடையவர்களை எதிர்பார்க்கின்றது.

*பதவிகள் :-*

1. விற்பனை நிறைவேற்று அதிகாரி (SALES EXECUTIVE)
2. அணித்தலைவர் (TEAM LEADER)
3. விற்பனை ஆலோசகர் (SALES CONSULTANT)

*தகைமைகள் :-*


1. க.பொ.த.(சா/த) தரத்தில் கணித பாடத்துடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. மேலதிக கல்வித் தகைமைகள் விஷேடமாகக் கவனத்தில் எடுக்கப்படும்.
3. காப்புறுதித் துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*நேர்முகத் தேர்வு :-* 13-08-2007 திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை

*சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :-*

1. தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ்
2. கல்விச் சான்றிதழ்கள்
3. கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிட குணநலச் சான்றிதழ்

*மேற்குறித்த தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் நேர்முகத் தேர்விற்காக பின்வரும் முகவரிக்கு அழைக்கப்படுகின்றீர்கள்.*



★ செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கம்பனி,
145,146, K.K.S. வீதி,
சுன்னாகம்.
021 222 8074, 0773107764. (63453)

## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

நரேஸ் மனைவி கௌசலா
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/777

எதிராக
தம்பிராசா நரேஸ்
மே/பா.எம்.அப்புலிங்கம்
977/1,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
எதிராளி

இவ்வழக்கு 2007 ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு அவர்களும் பிரசன்னமாயிருக்க மன்றின் கட்டளைப்படி எதிராளிக்கு அழைப்புக்கட்டளை 11.06.2007 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரித்து பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதியான 21.06.2007 இல் எதிராளி மன்றில் சமுகமின்மையால் இவ்வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இவ்வழக்கில் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த வழக்காளியின் சட்டத்தரணி மன்றின் அனுமதியைக் கோர மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக் காளியின் பிராது வ1 ஆவணம், வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து மன்று பரிசீலித்து வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2003 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டும் என்று வழக்காளியை விட்டுப் பிரிந்து சென்று வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதெனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி எதிராளிக்கு உதயன் தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்டு செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமெனக் கட்டளையிடப்படுகின்றது.

*2007 ஆம் ஆண்டு ஆடி மாதம் 16 ஆம் திகதி*

இ.த.விக்னராஜா
*மாவட்ட நீதிபதி.*

*வரைந்தது*
*வழக்காளியின் சட்டத்தரணி.*

*நீதிமன்றின் கட்டளைப்படி*
து.சிறிமோகன்
*பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

(63450)

## அபூர்வ ஜோதிடம்

கடும்பிடி தரும் நோய்களைக் குணமாக்குதல், அதிஷ்டகால பலன்களை அறிதல்.
தினமும் 8.30- 2.00 Pm
உயரப்புலப்பிள்ளையார் கோவிலடி,
விதானையார் வளவு,
ஆனைக்கோட்டை.
(63448)

## பதவி வெற்றிடம்

சஞ்சிகை விற்பனையாளர்கள்
வயதெல்லை 18- 40
கல்வித் தகமை G.C.E (O/L)
விண்ணப்ப முடிவு: 16.08.2007
விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.
PMC
443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(63442)

## மரண அறிவித்தல்



### சிதம்பரப்பிள்ளை இராசலட்சுமி

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கச்சாய் வீதி, 4 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இராசலட்சுமி 07.08.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவரெட்ணம்- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இரத்தினசபாபதி ஆகியோரின் சகோதரியும் சிவராசா, புனிதவதி (கனடா), சந்திரகுமார் (கனடா), புவனேஸ்வரி, ஆனந்தநடேசன் (இத்தாலி), சுந்தர்ராஜன் (சுவிஸ்), சோமஸ்கந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

*4 ஆம் ஒழுங்கை,*
*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
சிறி (மருமகன்).
(63440)

### தென்மராட்சியில் முன்னோடிச் சேவை

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை பிறப்பு, இறப்பு பதிவு செய்யாதவர்களுக்கு பிறப்பு, இறப்பு பதிவு செய்வதற்கான மற்றொரு முன்னோடிச் சேவையினை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தவுள்ளனர்.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி யாழ்.வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் சாவகச்சேரி பிரிவு பிறப்பு, இறப்பு பதிவுகாரர் க.மோகனராஜலிங்கத்தின் வழிகாட்டுதலில் முன்னோடிச் சேவை நடத்தப்படவுள்ளது.

(203-207)

### கணனிப்பயிற்சிக்கு நேர்முகத் தேர்வு

யாழ். லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படவுள்ள இலவச கணனிப் பயிற்சிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 55, அரசடி வீதி, தட்டாத்தெருச் சந்தியில் அமைந்துள்ள சொவ்றிவியூ கணனிக் கல்லூரிக்கு வருகைதருமாறு யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் கேட்டுள்ளார். இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்களையும் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் பொன்னுத்துரை



வேலணை, மணியகாரன் வீட்டடியை பிறப்பிடமாகவும் வேலணை, முதலாம் வட்டாரம், தாழ்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பொன்னுத்துரை கடந்த 06.08.2007 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் சிறிகரநாதன் (சிறி-கொழும்பு), ஜெகநாதன் (டென்மார்க்), சதானந்தன் (சுவிஸ்), சிவநாதன் (சிவா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், சோமசுந்தரம், பாக்கியலெட்சுமி, பூங்காவனம், முத்தம்மா, கண்மணி, இராசமணி (பிரான்ஸ்), சோதிமணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முத்தையா, சிவசுப்பிரமணியம் (இ.போ.ச), பரமானந்தம், அமிர்தலிங்கம், ஆசைரத்தினம் (கொழும்பு), சிவபாக்கியநாதன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2007) மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
வேலணை.

(63444)

தகவல்:
சிவா (மகன்)

### ஆறுமுகம் கார்த்திகேசு



ராணிமில் ஒழுங்கை, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கார்த்திகேசு கடந்த 06.08.2007 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்- குழந்தை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ் சென்ற சின்னம்மாவின் கணவரும் அமரர் சின்னத்துரை, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும் சிவஞானசுந்தரம் (குணம்- சுவிஸ்), பரமேஸ்வரி (நெல்லியடி), மகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளராணி (சுவிஸ்), கைலைநாதன் (நெல்லியடி), சிவரஞ்சன் (பிரான்ஸ்), சந்திரன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ராணி, சின்னத்துரை ஆகியோரின் மைத்துனரும் விஜிதா (சுவிஸ்), காந்தன் (சுவிஸ்), விஜிதரன் (சுவிஸ்), விஜித்திரா (சுவிஸ்), பார்த்தீபன் (நெல்லியடி), நவானி (பிரான்ஸ்), ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2007) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் சுவிஸில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*ராணிமில் ஒழுங்கை, நெல்லியடி.*

தகவல்:
சிவஞானசுந்தரம் *(குணம்- மகன்)*
(63445)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூசணி கனகநாயகம்
### (ஓய்வு பெற்ற ஆசிரியை- நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை)

அளவெட்டி, கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் தற்பொழுது இந்தியாவில் வசித்தவருமான திருமதி நாகபூசணி கனகநாயகம் கடந்த 06.08.2007 திங்கட்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர், நடேஸ்வராக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் யமுனா (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஜெயந்தா (லண்டன்), கஜேந்திரா (லண்டன்), குகேந்திரா (லண்டன்), மகேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் புண்ணியசீலன் (அதிபர், யா/யூனியன் கல்லூரி), சிவநாதன் (லண்டன்), சிவலோகநாயகி (லண்டன்), பவானி (லண்டன்), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் மங்கையர்க்கரசி, சரஸ்வதி, மீனம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருணாச்சலம், பாலக்கிருஷ்ணன், குமாரதேவர் ஆகியோரின் மைத்துனியும் அனித்திரி, கேதார்ணி, நிஷந்திரி, சிவேந்திரா, நர்த்தனி, மயூரன், சோவி, மதுஷா, ரம்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை இன்று (09.08.2007) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல்12 மணியளவில் சென்னை, அயனாவரம், வேலங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P.: 02088686536 *(லண்டன்),*
9940525228 *(இந்தியா).* (சி.53194)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிக எண்ணிக்கையில் கிடைக்கவில்லை

## மனித உரிமைகள் அவதானிப்பு மையம் விளக்கம்

கொழும்பு, ஒக.9

இலங்கை விடயம் தொடர்பாக இலங்கை அரசு மீதும், அரசுப் படைகள் மீதும், அரசுப் படைகளோடு சேர்ந்து இயங்கும் கருணா குழு மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, திங்களன்று தனது அறிக்கையை வெளியிட்டிருக்கும் மனித உரிமைகள் அவதானிப்பு மையம் அந்த அறிக்கையில் புலிகள் தரப்பை அதிகம் சாடவில்லை என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றது.

''அண்மைய 'இந்த' காலகட்டத்தில் அரசுக்கும், அரசுப் படைகளுக்கும், கருணா குழுவுக்கும் எதிராகவே பெரும்பாலான முறைப்பாடுகள் எமக்குக்கிடைத்துள்ளன. அது ஒரு காரணம். அடுத்தது - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியுடன் அல்லது பகுதியில் எமக்குக் கிரமமான தொடர்பு இல்லாத விடயமாகும். இதன் காரணமாகப் புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் எமக்குத் தெரியவராமல் போயிருக்கலாம்'' - என்று 'உதயனு' க்கு விளக்கமளித்தார் ம்னித உரிமைகள் அவதானிப்பு மையத்தின் ஆசியப் பிரிவுக்குப் பொறுப்பான ஆய்வாளரான சாரு ஹோக் அம்மையார். லண்டனைத் தளமாகக் கொண்டு அவர் செயற்பட்டு வருகின்றார்.

'ஊடகப் பணியாளர்கள் அரசுத் தரப்பினதும் புலிகளினதும் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றார்கள் என்று இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளீர்கள். ஊடகத் தரப்பினர் புலிகளின் அழுத்தத்துக்கு உள்ளாகியமை தொடர்பாக உங்களுக்கு விசேடமான - குறிப்பாகப் புலிகள் மீது குற்றம் சுமத்துகின்ற - முறைப்பாடுகள் ஏதும் அண்மைக்காலத்தில் கிடைத்திருக்கின்றனவா? அவ்வாறாயின் இத்தகைய முறைப்பாடுகள் எத்தனை கிடைத்துள்ளன?'' - என்று அவரிடம் கேட்டோம்.

''உண்மையில் அத்தகைய குறிப்பிட்டுக் கூறக்கூடிய முறைப்பாடு ஏதும் - ஊடகவியலாளர் மீதான அழுத்தம் தொடர்பான விடயத்தில் - புலிகளுக்கு எதிராக அண்மைக் காலத்தில் எமக்கு கிடைக்கவில்லை. அல்லது எமது கவனத்திற்குக் கொண்டு வரப் படவில்லை என்றே கூறவேண்டும். எனினும், இவ்விவகாரம் தொடர்பாக புலிகள் மீதுள்ள பொதுவான குற்றச்சாட்டே இந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது'' - என்றார் அவர். (சி)

# பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக நாடாளுமன்றை மாற்றுகின்றனர்!

## அரச தரப்பின் மீது எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.9

''நாடாளுமன்றத்தை அமைச்சர்களும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் முல்லேரியா பைத்தியக்கார ஆஸ்பத்திரி போலாக்குகின்றனர். நாடாளுமன்றத்தை பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக மாற்ற இடம் அளிக்காமல் இவர்களைப் பிடித்து முல்லேரியாவுக்கு அனுப்பி வையுங்கள்.'' என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க சபாநாயகரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தின் கேள்வி நேரத்தின் போதே இவ்வாறு அவர் குறிப் பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் முறையாகப் பதில் அளிப்பதில்லை. ஏட்டிக்குப் போட்டியான பதில்களைக் கூறி நாடாளுமன்றத்தைக் கேலிக்கூத்தாக்குகின் றனர்.

நாம் மக்களின் நலன் கருதியே இந்தச் சபையில் கேள்விகளை எழுப்புகின்றோம். அதற்குப் பதில் அளிக்க வேண்டியது அமைச்சர்களின் கடமை. ஆனால் இங்கே முட்டாள் தனமாகப் பதில் அளிக்கின்றனர். - என்றார் ரவி கருணாநாயக்க.

''அதுவும் சரிதான். ரவி கருணாநாயக்கவுக்குப் பெரிய மூளை. அவருக்குப் பெரிய அளவில் பதில் அளிக்க வேண்டும். அவரது மூளையில் கிளம்பும் எல்லாக் கேள்விகளுக்கும் என்னால் பதில் அளிக்க முடியாது.'' - என்றார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

அப்போது ஆளும்தரப்பினர் ''ரவி கருணாநாயக்க கழுதைப்பால் குடிப்பவர். பன்றிப்பால் குடிப்பவர்'' என்று கூச்சல் இட்டனர்.

''ஐயா! இப்படியான பைத்தியக்காரர்களை எப்படி வைத்திருப்பது? இவர்களை உடனே பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும்!'' - என்றார் ரவி கருணாநாயக்க. (சி)

## காற்றில் பறந்து சென்று தாக்கிய விளம்பரப் பலகை!

மினிபஸ்ஸின் மேல்தட்டில் ஏற்றிவரப்பட்ட கடை ஒன்றின் விளம்பரப்பலகை காற்றில் பறந்துசென்று வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் மேல் விழுந்ததில் அவர் தலையிலும் தோளிலும் காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை சங்கானையில் இடம்பெற்றது.

சுழிபுரம் வடக்கைச் சேர்ந்த இராசையா தவரஞ்சன் (வயது-19) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இவர் சங்கானை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-29)

## வேலணையில் 13 பிணக்குகளுக்கு இணக்கம் காணப்பட்டது

வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை தனது பிரிவுக்குட்பட்ட மக்களிடமிருந்து கிடைத்த 15 முறைப்பாடுகளின் 13 பிணக்குகளை இணக்கமாகத் தீர்த்து வைத்துள்ளது.

இத் தகவலை சபையின் தவிசாளர் கே. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வேலணை பிரதேசத்திற்கென மத்தியஸ்தர் சபை உருவாக்கப்பட்டதிலிருந்து பிரதேச மக்களால் 15 பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 13 பிணக்குகள் இரு தரப்பினதும் இணக்கத்துடன் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. தீர்த்துவைக்க முடியாத இரு பிணக்குகள் நீதிமன்றிற்கு விடப்பட்டது- என்றார். (202-111)

## மாடுமுட்டி பெண்மரணம்

மாடுமுட்டி வயோதிபப் பெண் மரணமானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராசலட்சுமி (வயது 69) என்பவரே மரணமானவராவர்.

தொழுவத்தில் கட்டியிருந்த மாட்டினை மேய்ச்சலுக்காக அவிழ்த்துக் கொண்டிருந்த வேளையில் மாடு முட்டி தாக்கியதாகவும், இவர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

01.08.2007 அன்று வெளியான 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் 1 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01) E | 15) 3 | 28) 2, 4 |
| 02) B | 16) 1 | 29) 2 |
| 03) B | 17) 3 | 30) 4 |
| 04) D | 18) 2 | 31) காய் |
| 05) C | 19) 3 | 32) களிமண் |
| 06) C | 20) 3 | 33) 2 |
| 07) 1 | 21) 1 | 34) 2 |
| 08) 2 | 22) 3 | 35) 3 |
| 09) 1 | 23) 1 | 36) 1 |
| 10) 2 | 24) 3 | 37) 2 |
| 11) 2 | 25) 2 | 38) 3 |
| 12) 1 | 26) 1 | 39) 2 |
| 13) 1 | 27) C, E | 40) B |
| 14) 2 | | |

# பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டம் யாழ்.வலயத்தில் சென்.பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக.9

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து நடத்தி வரும் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வலய மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் கொழும்புத்துறை சென். ஜோசெப் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.



கல்லூரி உப அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர் ஆகியோருடன் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் உதைபந்தாட்ட அணியினர். அணியினர்.

போட்டி ஆரம்பமாகிய நேரம்முதல் இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்கென பெரு முயற்சியில் ஈடுபட்ட போதிலும் கோல்கள் எதனையும் இரு அணிகளும் போட்டி நிறைவு பெறும்வரை பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

இந்த நிலையில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் ஐந்து இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டன.

இரு அணிகளும் தமக்கு கிடைத்த சமநிலை உடைப்பு உதைகளை முழுமையாகப் பயன்படுத்தத் தவறிய போதிலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரண்டு உதைகளை உரிய முறையில் உதைத்து கோல்களைப் பெற்றுக்கொண்டமையால் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 : 0 என்ற கோல்களினால் சென்.ஜோசேப் கல்லூரியை வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (50-86)

## விளையாட்டு நிகழ்வு

கைதடி,ஒக.9

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 52ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி மற்றும் நாவற்குழி பிரதேச ரீதியாக மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியும், ''செற்றப்'' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போடடியும் நடைபெற்று வருகின்றன. (50-75)

## யங்ஹென்றீஸ் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி ஆட்ட விவரம்

யாழ்ப்பாணம்,ஒக. 9

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நூற்றாண்டு விழாவையொட்டி இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

*இன்று வியாழக்கிழமை*

* மயிலங்காடு ஞானமுருகன் எதிர் கொக்குவில் காளியம்பாள்.
* பாடும் மீன் 'பி' எதிர் ஏழாலை கண்ணகி.

*நாளை வெள்ளிக்கிழமை*

* நாவாந்துறை கலைவாணி எதிர் குருநகர் பாடுமீன் 'ஏ'. (50-86)

## விளையாட்டு

# தாச்சிச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோன் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக. 9

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது 55ஆவது ஆண்டு நிறைவையொட்டி மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வந்த தாச்சிச் சுற்றுப்போட்டி இறுதி ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் வெஸ்ரோன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் வெஸ்ரோன் வி.க. வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பமாகிய முதல் பாதியில் முதல் 11 நிமிடத்தில் வெஸ்ரோன் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து 04 பழங்களை பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து தென்றல் விளையாட்டுக்கழகம் 02 பழங்களைப் பெற்ற நிலையில் மேலும் ஒரு பழத்தை வெஸ்ரோன் விளையாட்டுக் கழகம் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் 5 : 2 என்ற பழங்கள் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை தென்றல் விளையாட்டுக் கழகம் பெரு முயற்சியில் மேலும் நான்கு பழங்களைப் பெற்றுக்கொண்ட போதிலும் வெஸ்ரோன் விளையாட்டுக் கழகம் 02 பழங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

ஆட்டம் முடிவடைந்த போது வெஸ்ரோன் விளையாட்டுக் கழகம் 7 : 5 என்ற பழக் கணக்கில் தென்றல் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் 10 : 6 என்ற பழங்கள் கணக்கில் இளைஞர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

# நீர்வேலி சவாரித் திடலில் போட்டிகள் மீண்டும் ஆரம்பம்

வலி.தென்மேற்கு, ஒக.9

நீர்வேலி சவாரித் திடலில் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டிகள் நீண்டகால இடைவெளிக்குப் பின்பு மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

ஞாயிற்றுக்கிழமைகளில் இப் போட்டி நடைபெற்று வருவதாகவும், பல்வேறு இடங்களிலிருந்தும் பல மாட்டு வண்டிகள் இப் போட்டிக்கு கொண்டுவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற மாட்டுவண்டி சவாரிப் போட்டியில் 24 சோடி மாடுகள் பங்குபற்றியுள்ளன. கடந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற போட்டியின் போது 18சோடி மாடுகள் பங்குபற்றின. சவாரிப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சவாரி மாடுகளின் விலையும் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (50-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு வேண்டும்

தட்டாதெருச் சந்திக்கும், மிட்டாஸ் கடைச் சந்திக்கும் இடைப்பட்ட காங்கேசந்துறை வீதியில் அல்லது – காங்கேசந்துறை வீதியின் அண்மித்த கிளை வீதிகளில் – கடை அல்லது வீடு வாடைக்கு வேண்டும். தொடர்பு கொள்ளவும்.

021 222 3081


## வெளிமாவட்டம் செல்ல முடியாத கிராம சேவையாளருக்கு யாழ்.மாவட்டத்தில் நியமனம்

வெளிமாவட்டங்களுக்குக் கடமைக்குச் செல்லமுடியாது யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள கிராம சேவையாளர்கள் இங்கேயே கடமை புரிவதற்கு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிமாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள கிராம சேவையாளர்கள் யாழ்.மாவட்டத்தில் தங்களுக்கான பணி நியமனங்களைக் கோரி சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த 3ஆம் திகதி அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்து தமது நெருக்கடி நிலைமைகளைக் கூறினார்.

இவர்களது கோரிக்கையை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொண்டதன் பயனாக மேற்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சமூகசேவைகள் அமைச்சு இந்த விடயம் தொடர்பாக அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)


## மணமகள் தேவை

64 ஆம் ஆண்டு ரேவதி 4 ஆம் பாகம், 4 செவ்வாய், வர்த்தக மணமகனுக்கு இந்து கௌரவ குடும்ப, படித்த, அழகான மணமகள் தேவை.

தொடர்பு: உதயன் மே/பா, விளம்பர இல.2997 (63436)

## மணமகன் தேவை

1966 ஆம் ஆண்டு மூலநட்சத்திரம் இந்து கௌரவகுடும்பம், வர்த்தக மணமகளுக்கு படித்த அழகான மணமகன் தேவை.

தொடர்பு: உதயன் மே/பா, விளம்பரம் இல.2998 (63437)

## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna

Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office<br>3 Months<br>1,000/= | Accounting Package<br>3 Months<br>~~8,250~~/= 1,650/= |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :

Batch I :11/08/2007
Batch II :12/08/2007
Batch III :15/08/2007
Batch IV :18/08/2007

## அச்சகம் விற்பனைக்கு உண்டு
OFF SET PRINTING PRESS FOR SALE

நவீன முறையில் அமைந்த – இயங்கிக் கொண்டிருக்கும் – ஆப்செட் அச்சகம் விற்பனைக்கு உண்டு. A3 மெசின் ஒன்று, கிளச் மோடல் முப்பது அங்குல கட்டருடன் கூடிய அனைத்து நவீன வசதிகளுடன் 25 x 8.5, 25 x 15 அடி நீள அகல இரு செட்டும் (SHED) விற்பனைக்கு உள்ளது. கல்லூரி விடுமுறை நாள்களில் காலை 6.30 மணி முதல் மாலை 6.30 மணிவரையும், கல்லூரி நாள்களில் மாலை 3.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம். 222 7086

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய Bahiraha புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 09.08.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டைக் கிளை
★ மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

T.P.No. 222 2867, 222 3529 (63413)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 - 02 - 1953

உதிர்வு 11 - 08 - 2004

திருமதி

**பாக்கியலட்சுமி அன்னலிங்கம்**

*திதி: அபரபக்க ஏகாதசி (09.08.2007)*

ஈரவிழிகள் காய்ந்து போனாலும்
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நீங்காத எம் நினைவலையாய்
என்றுமே எம் இதயக்கோயிலில் வீற்றிருப்பாய்.

*என்றும் உன் நினைவுகளுடன்:*
கணவர், பிள்ளைகள்,
மருமகள், பேரன்.

*44, 3ஆம் குறுக்குவீதி,*
*கொழும்புத்துறை.* (63424)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 ★ 07 ★ 1979

மறைவு 21 ★ 07 ★ 2006

**அமரர் சின்னமணி தர்மராஜா**

(முகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்)

ஆண்டொன்று கடந்தாலும்
அருமை நினைவுகள் அழிவதில்லை
உன் வதனம் எம்முன்னே
நிழல் ஆடுகின்றது
என்றோ ஒருநாள்
நாமும் வாழ்வோம்.

*உன் ஆன்மா சாந்திபெற*
*இறைவனை இறைஞ்சுகின்றோம்.*


இராச வீதி,கோப்பாய். (F/53179) -குடும்பத்தினர்.

# மக்கள் சேவை விருது

## பிரதேச செய்தியாளர்களுக்கான விருது 2007

முறையான ஊடகத்துறைக்காக சகிப்புத்தன்மை மற்றும் மக்கள் சேவை அபிவிருத்திக்காக

### உங்கள் செய்தி சேகரிப்புக்குள்....



- ஜனநாயகம், பல்வேறுபட்டவர்களின் கருத்துக்கள் மற்றும் மாற்றுக் கருத்துக்கள் மீதான சகிப்புத்தன்மையை வெளிப்படுத்தியிருந்தால்
- பிழையற்ற, பக்கச்சார்பற்ற, உண்மைத் தன்மை பொதிந்திருந்தால்
- குடிமக்களின் தேவை குறித்த பிரதிபலிப்பு காணப்பட்டால்
- சமூகத்தை புரிந்து கொள்வதற்காக சமூகத்துக்கு உதவியிருந்தால்
- உங்கள் செய்திக்குள் பலரது கருத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தால்
- வாசகர்கள், பார்ப்போர் மற்றும் கேட்போர் ஆகியோருக்குள் நம்பிக்கையை கட்டியெழுப்பியிருந்தால்
- மக்கள் ஆர்வம் கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்திருந்தால்
- அவற்றுக்கு தீர்வைத் தேடியிருந்தால்

**மக்கள் சேவை ஊடகம்**
**மற்றும்**
**சகிப்புத்தன்மைக்கான**
**விருதுக்காக**
**விண்ணப்பியுங்கள்**

**விசாரணை**

பிரதேச செய்தியாளர்களின்
சங்கங்கள் அல்லது
இணைப்பாளர்,
மக்கள் சேவை ஊடக விருது
2007

1 சீ 1/1, 28-ஆவது ஒழுங்கை,
ப்ளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி : 060 2144140
psjaward2007@gmail.com

அனுசரணை

ஊடக அமைப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# எல்லாவற்றுக்கும் குற்றச்சாட்டு தமிழர்களின் தரப்பின் மீதுதான்

நாய்க்குக் கல் எறிந்தால், அந்தக் கல் உடலின் எந்தப் பாகத்தில் பட்டாலும், நாய் காலைத்தான் தூக்கிக்கொண்டு ஓடும் என்பார்கள்.

அப்படித்தான் இன்று தென்னிலங்கை அரசியல் கலாசாரமும். எந்த அரசியல் பிரச்சினையாயினும் தமக்கு சுயலாபம் ஈட்டுவதற்காக அவ்விடயத்தைத் தமிழர் தலையில் - இப்போதைய நிலையில் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான புலிகள் மீது - போடுவதுதான் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் சாமர்த்தியம்.

'செட்டியார் நட்டம் ஊர் மேலே' என்பது போல - 'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியாரிடம்' என்பது போல - எல்லா விடயங்களிலும் குற்றத்தைப் புலிகள் மீது போட்டு தங்களை அரசியல் சுத்தவாளிகள்ாகக் காட்டுவதுதான் தெற்கின் அரசியல் நாகரிகமாக இப்போது மிளிர்கின்றது.

தென்னிலங்கையில் அரசியல் களம் இப்போது சூடு பிடித்திருக்கின்றது. பதவி ஆசைக்கு அடிமையான அரசியல் குத்துக்கரணங்களைப் பயன்படுத்தித் தமது அரசின் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளும் தந்திரோபாயத்தை நம்பியிருந்த ஜனாதிபதி மஹிந்தருக்கு அது இப்போது சற்று இடறத் தொடங்கியிருப்பது போலத் தோன்றுகின்றது.

பதவி ஆசையுடன் வாலாட்டிக்கொண்டிருந்த பலருக்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்பட்டு விட்டாயிற்று. ஆனால் அத்தகைய பலரும் பெயருக்குத்தான் அமைச்சர்கள். அதிகாரம் எல்லாம் 'ராஜபக்ஷ அண்ட் சகோதரர்கள் கம்பனி' யிடமே குவிந்து கிடப்பது கண்கூடு. இதனால் பதவி ஆசைக்கு 'பல்டி' அடித்தவர்கள் விசனத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். பெயருக்குக் கிடைத்திருக்கும் அமைச்சர் பதவிகளை உதறித்தள்ளிவிட்டு வெறும் எம். பியாக இருப்பது மேல் என்ற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள் போலும்.

ஏற்கனவே மங்கள - சிறிபதி அணி அரசிலிருந்து வெளியேறிவிட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஐந்து எம். பிக்கள் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவிகளைத் துறந்துவிட்டு மதில் மேல் காத்திருக்கின்றனர்.

நாடாளுமன்றில் அரசின் பெரும்பான்மை நூலிழையில் ஊசலாடக்கூடிய ஒரு அரசியல் இழுபறி நிலைமை மெல்ல மெல்ல உருவாகி வருகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மஹிந்தரின் அரசை வீழ்த்த கங்கணம் கட்டி நிற்கின்றது எதிரணி - குறிப்பாக ஐக்கியதேசியக் கட்சி.

ஐ. தே. கட்சி, ஜே. வி. பி. போன்ற எதிரணிக்கட்சிகள் தமது அரசைக் கவிழ்த்து விடுமோ என்ற பீதியில் உறைந்து கிடக்கும் அரசுத் தலைமை, வழமைபோல அந்த அரசியல் பிரச்சினையிலிருந்து மீளுவதற்காக விவகாரத்தை - பழியை - தமிழர் தரப்பு மீது போடும் தமது நயவஞ்சகப் போக்கை ஆரம்பித்து விட்டது. தமது அரசியல் (அ)நாகரிகத்தை அவர்கள் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

நாடாளுமன்றப் பெரும்பான்மை இடறப் போகின்றது என்று அரசுத் தலைமை உணரத் தொடங்கியதுமே, அதிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான முதல் நடவடிக்கையாக குற்றச்சாட்டு தமிழர் தரப்பு மீதே சுமத்தப்படத் தொடங்கியாகிவிட்டது.

'ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்ப்பதற்காக, 22 எம். பிக்களைக் கொண்ட - புலிகள் சார்பிலான - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கூட்டுச் சதி செய்கின்றது' - என அரசின் குரலாக ஒலித்தார் அரசுத் தரப்பின் நாடாளுமன்றப் பிரதம கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

ஏற்கனவே ஐ. தே. கட்சியிலிருந்து குத்துக்கரணம் அடித்து அமைச்சர் பதவிகளோடு ஆளுந்தரப்புக்குப் போய்ச் சேர்ந்த பிரமுகர்களை மீண்டும் எதிரணிக்கு இழுக்கும் சூழ்ச்சிக்கும் வலை விரிக்கப்பட்டிருப்பதாக 'குத்துக்கரண அணி'யின் தலைவர் அமைச்சர் கரு ஜயசூரிய நாடாளுமன்றில் 'ஒப்பாரி' வைத்திருக்கின்றார்.

அவர் கூறுவதுபோல் அப்படி அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கலாம். அதற்காகப் பலகோடி ரூபா பணத்தை ஆசைகாட்டி பேரம் பேசியிருக்கலாம். தென்னிலங்கை அரசியலில் அது சர்வ சாதாரணமாக நடக்கக் கூடிய விவகாரமே.

ஆனால் அதற்கும் புலிகளின் பணமே முதலீடு என்றும், புலி ஆதரவாளரான தமிழ் தனவந்தர் ஒருவரே புலிகளின் சார்பில் இந்தளவு பணத்தை பேரமாகப் பேசி ஆளும் தரப்பில் உள்ள எம். பிக்களை எதிரணிக்கு இழுக்க சூத்திரதாரியாகச் செயற்படுகின்றார் என்றும் கூறுவது அபத்தமானது. எல்லா விவகாரத்திலும் அரசியல் லாபம் ஈட்டுவதற்கு தமிழர் தரப்பின் மீது- புலிகள் மீது - அதைச் சுமத்தும் வழமையான தென்னிலங்கைப் போக்கின் மற்றொரு அத்தியாயமே இது.

அரசுக்கு மாறாக 'அரசியல் குத்துக்கரணம்' அடிப்போர் மீது, புலிகளின் நிதியை வாங்கிக்கொண்டு 'பல்டி' அடிக்கின்றார்கள் எனச் சித்திரிப்பதன் மூலம் தென்னிலங்கையில் அவர்களின் செல்வாக்கைக் கெடுப்பதும், அப்படிக் குத்துக்கரணம் அடித்தால் புலிச்சாயம் பூசுவோம் என்று அத்தகையோருக்கு எச்சரிப்பதுமே இத்தகைய எத்தனங்களின் பின்னால் புதைந்து கிடக்கும் அரசியல் குரூரத்தனமாகும்.

தமிழர் தேசத்தை - தமிழர் தேசியத்தை - கடுமையாக எதிர்ப்பவர்கள் என்று தம்மை வெளிப்படுத்துவதன் மூலம் 'பௌத்த - சிங்களத் தேசியப் பற்றாளர்களாக இனங்காட்டி, அதன் வாயிலாகத் தமது செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்ளும் இனவெறி அரசியல் அணுகுமுறையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஊறிக்கிடக்கிறார்கள். அவர்களிடமிருந்து இத்தகைய பிரதிபலிப்புகளைத்தான் எதிர்பார்க்க முடியும்.

# மூதூர்ப் படுகொலைகள் உலகின் மனிதாபிமானப் பணிகள் மீதான கொடூரமான தாக்குதல்!

## ஒரு வருடமாகியும் எவரும் கைதாகவில்லை என்று சாடுகிறார் ஹோம்ஸ்

கொழும்பு, ஒக.9

கிழக்கிலங்கையில் மனித நேயப் பணிகளில் ஈடுபட்டிருந்த பட்டினிக்கு எதிரான தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேரின் கொலை தொடர்பாக நீதித்துறையின் முழுமையான அழுத்தத்தோடும் வேகத்தோடும் அரசாங்கம் புலனாய்வுகளை நடத்தவேண்டும்.

இவ்வாறு ஐ.நா. மனிதநேய அதிகாரி இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நாவின் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகாலப் பணி இணைப்பாளர் பொறுப்பை வகிக்கும் கீழ் நிலைச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற மூதூரில் கொலை செய்யப்பட்ட பட்டினிக்கெதிரான நிறுவன ஊழியர்கள் 17 பேரின் நினைவு நிகழ்ச்சி யொன்றில் உரையாற்றினார்.

இக்குற்றச் செயல் இடம்பெற்று ஒரு வருடம் கடந்துவிட்டது. எவரும் கைது செய்யப்படவோ குற்றஞ்சாட்டப்படவோ இல்லை. பல வகையிலும் இவ்விடயத்தில் உண்மைக்கு வெகுதூரத்திலேயே இருக்கிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:

நமக்கு என்ன தெரியவேண்டும் என்றால், யார் இதைச் செய்தவர்கள், எதிர்காலத்தில் இவ்வாறு மீண்டும் நடக்காமல் தடுப்பது எப்படி என்பதே. இந்தக் குற்றச் செயலின் உண்மை நிலையை வெளிப்படுத்துவது மட்டுமல்ல முக்கியம். உலகம் முழுவதும் இடம்பெறும் மனிதாபிமான செயற்பாடுகளின் மீது நடத்தப்பட்ட கொடூரமான ஒரு தாக்குதலாகும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஒரு தனி மனிதாபிமான தொண்டு அமைப்பின் பணியாளர்கள் பலர் கொல்லப்பட்ட சம்பவம் வேறு எதுவும் உலகில் நடைபெற்றதாக என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

கொலையுண்ட பணியாளர்கள்சுனாமி பாதித்த இலங்கையின் மிகவும் இருண்ட வேளையில் அந்த அனர்த்தத்தின் பின்னர் மக்களுக்குரிய அத்தியாவசிய சேவைகளை செய்தவர்கள் என்பதனை கொலைஞர்கள் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

அவர்களின் தியாகம் வீண போய் விடக்கூடாது. இந்தப் பணியை நாம் தொடர்ந்துசெய்ய, உதவி தேவைப்படுபவர்களுக்கு அதை வழங்க நாம் அவர்களின் நினைவாக உறுதி எடுத்துக்கொள்வோம். அவர்கள் தம் வாழ்வை அர்ப்பணித்த கொள்கைகளை நாம் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் - என்று கூறினார்.

(அ-ப)

# காணாமற்போன 5,749 பேரின் நிலைபற்றி ஐ.நா. குழு ஆராய்கிறது

கொழும்பு, ஒக. 9

காணாமற்போனவர்கள் தொடர்பான 5,749 சம்பவங்கள் குறித்து ஐ.நா. பணிக்குழுவொன்று தற்பொழுது ஆய்வு செய்து வருகின்றது. சர்வதேச மன்னிப்புச் சபை இது பற்றி தகவல் வெளியிட்டுள்ளது.

பலவந்தமாக அல்லது சுயவிருப்பமற்ற முறையில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களில் எஞ்சியுள்ள 5, 749 பேர் தொடர்பாக இந்தப் பணிக்குழு தற்போது ஆராய்ந்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையொன்றின்படி 2006ஆம் ஆண்டு முதல் நூற்றுக்கணக்கான ஆண்கள் இலங்கையின் வடக்குக் கிழக்கு மற்றும் கொழும்பு போன்ற பகுதிகளில் காணாமற்போயிருக்கிறார்கள். இவர்கள் பாதுகாப்புப் படையினரால் அல்லது ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டுள்ளார்கள் அல்லது பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஒகஸ்ட் மாதச் செய்தி அறிக்கையில் இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இவர்கள் பெரும்பாலும் விசாரணைக்கென கொண்டுபோகப்படுவார்கள், இரகசியமாக விசாரிக்கப்படுவார்கள், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டமைக்கான எதுவித பதிவுகளும் கிடைப்பதில்லை, இவற்றில் பலசம்பவங்கள் ஆயுதப் படையினரையும் விடுதலைப் புலிகள் உட்பட ஆயுதக் குழுக்களையும் சம்பந்தப்படுத்துவதாக உள்ளன.

இதில் ஒரு சம்பவம் கிழக்கு இலங்கை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் தொடர்பானது. கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி கொழும்பில் மாநாடு ஒன்றுக்கு அவர் சென்றிருந்தார். இராணுவத்தின் இறுக்கமான கட்டுப்பாட்டிலிருந்த பகுதியில் வைத்து அவர் கடத்தப்பட்டார். அதற்குப் பிறகு அவரைப்பற்றிய தகவலே இல்லை.

ஐ.நா. பணிக்குழுவில் சுயாதீனமான 5 நிபுணர்கள் அங்கம் வகிக்கிறார்கள். காணாமற் போனவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பதைத் தெளிவாக நிர்ணயிப்பதே இக்குழுவின் பிரதான கடமையாகும். (அ-ப)

# கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கடலைப் பருப்பு மீளவும் கொழும்புக்கு

## மக்கள் கொள்வனவில் அக்கறைக் காட்டாமையால்

யாழ்ப்பாணம், ஒக.9

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கடலைப் பருப்பு மீண்டும் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட உள்ளது.

கடந்த மாதத்தில் கப்பல் மூலம் 600 மெற்றிக்தொன் கடலைப் பருப்பு எடுத்துவரப்பட்டிருந்தது.

கடலைப் பருப்பை பொதுமக்கள் விரும்பி வாங்காததால், விற்பனையாகாமல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக் கிடந்தது. அதனால் திருப்பி கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது.

அதற்கு வசதியாக, கடலைப் பருப்பை பெற்றுக்கொண்ட ப.நோ. கூ. சங்கங்கள் தமது கையிருப்பில் உள்ளதை இன்று கோண்டாவில் களஞ்சியத்தில் கையளிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கையளித்த அளவின் விவரத்தை செயலக திட்டப் பணிப்பாளருக்கு அறிவிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

(அ-1)

# சிதம்பராவில் இன்று சாரணர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக.9

உலக சாரணர் நூற்றாண்டை ஒட்டி பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டிலான விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சிதம்பராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை மாவட்ட ஆணையாளர் ஆ. ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வட மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். புஸ்பலிங்கம் கலந்துகொள்வார். (அ-1)

# பருத்தித்துறை ஓடக்கரையில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஒக.9

பருத்தித்துறை, ஓடக்கரை வெள்ள வாய்க்கால் ஒழுங்கைப் பகுதிக்குள் நேற்றுக்காலை திடீரெனப் பிரவேசித்த 'பீல்ட்பைக்' குறூப்பினர் அப்பகுதியில் நின்ற இளைஞர்கள் சிலரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

விசாரணைக்குட்படுத்திய இளைஞர்களில் இருவரை இராணுவத்தினர் தீவிரமாக விசாரித்ததுடன் அவர்களிடமிருந்து அடையாள அட்டைகளை பெற்றுச் சென்றனர்.

அத்தோடு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள படைமுகாமிற்கு வருமாறு பணித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் திடீர்நடவடிக்கையால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது. (அ-78-15)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 25 | வெள்ளிக்கிழமை 10.08.2007 |
| திதி : துவாதசி | மு.பகல் : 07.35 |
| நட்சத்திரம் : | திருவாதிரை பி.பகல் : 01.19 |
| சுபநேரம் | : 06.04 - 07.34 |
| ராகுகாலம் | : 10.34 - 12.04 |

# சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்







சங்கானையூர் சண்முகரத்தினம்

**துலாம்:**- (சித்திரை 3, 4ஆம் கால்களும், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் கால்களுடைய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு)

உங்கள் ராசிக்கு 11ஆம் வீட்டில் 4ஆதிபதி, 5 ஆதிபதி சனிபகவான் கேதுவுடன் சேர்ந்திருக்க, செவ்வாயும் நோக்குவது 05.08.2007 தொடக்கம் அடுத்த 2 1/2 வருடம் பலன்தர இருக்கும் சனி பகவானுடைய காலப்பகுதியில் முக்கியம். 16.09.2007 வரை வாகனம், பூமி, உடைமை என்பவற்றால் நட்டம் ஏற்படும். அல்லது பண இழப்பு, களவு கொடுத்தல் இப்படியானவை நடக்க ஏதுவாகும். மேலும் மூத்த சகோதரர் அல்லது மூத்த சகோரங்களுக்கு ஏற்படக் கூடிய துன்பங்கள் மற்றும் குடும்பஸ்தர்கள் புத்திரரால் கஷ்டப்பட அல்லது அவர்களுடைய நலன் பாதிப்பால் பலன் வரும்.

எது எப்படியானாலும் 10.04.2008 இன் மேல்தான் ஓரளவு சுகமுண்டு. மேலும் 15.11.2007 வரை வியாழ சுகமுண்டு. இதனால் குருபார்வையால் எல்லாவித துன்பங்கள் "கண்ணில் வருவது புருவத்துடன்" போன மாதிரிப் பலன் உண்டு. குடும்பஸ்தர்களுக்கு நல்லதுமில்லை, கெட்டதுமில்லை என்ற சமபலன் தரக்கூடியதாக இருக்கும்.

**மாணவர்களுக்கு:**- கல்வியால் நற்பலன் உண்டு. பெறுபேறுகள் நன்மை தரும். பணச்செலவு அதிகரிக்கும். பெற்றோர், சகோதரர்களால் நன்மையுண்டு. சிலருக்கு மூத்த சகோதரங்களுடைய கஷ்ட நிலை கவலை தரக்கூடிய பலனைத் தரும். பொறியியல் துறையுடன் கூடிய கல்வியில் உயர்கல்வி படிப்பவர்களுக்கு 10.04.2008 வரை பூரணமாக நற்பலன் கிடைக்கும் என்று சொல்வதற்கு இல்லை.

**தொழிலாளர்கள், உத்தியோகத்தர்களுக்கு:**- தொழில் கிரகம் சந்திரனாக இருப்பதால், கடல் கடந்த நாட்டில் தொழில் செய்வோருக்கு நற்பலன் உண்டு. தொழில் நிலையில் வியாபாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சம பலன் உண்டு. வருவாய்க்கு மிஞ்சிய செலவு செய்யவும் பணத்தை இழந்து விட அல்லதுவாகனம், பூமியை வாங்கி நட்டமடையவும் அல்லது இழப்பு ஏற்படவும் பலன் உண்டாகும். ஆனாலும் 2இல் குரு நிற்பது குடும்பச் சிறப்பைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி ஆசிரியரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரம் - பற்றிய விசயத்தில் உள்ள தவறு பற்றி மட்டுமே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப்பிரிவில், 'சுடர் ஒளி' ஆசிரியர் என்.வித்தியாதரன், இருபத்தியைந்து பத்திரிகை ஆசிரியர்களுடன் ஓகஸ்ட் 16ஆம் திகதி (2006) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய காலை உணவுச் சந்திப்பின்போது, தமது பாதுகாப்புத் திடீரென விலக்கப்பட்ட விடயத்தை ஜனாதிபதியிடம் எழுப்பிய சமயம் ஜனாதிபதி சினமுற்று சத்தமிடத் தொடங்கினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் பாதுகாப்பைக் கோரும்படி ஜனாதிபதி அப்போது கூறினார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆசிரியர்களின் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அன்று கலந்து கொண்டவன் என்ற முறையில் அத்தகைய சம்பவம் அன்று நடைபெறவில்லை என நான் முழுமையாக மறுக்கிறேன்.

இது முழுமையாகத் தவறான கூற்று. பத்திரிகை ஆசிரியர்களுடனான எந்தச் சந்திப்பிலும் வித்தியாதரனுடனோ அல்லது வேறு யாருடனோ ஜனாதிபதி சந்தமிடவில்லை என்பதை பிரசன்னமாகி இருந்த எல்லா பத்திரிகை ஆசிரியர்களும் அவதானித்திருப்பர்.

முற்றாகத் திரிக்கப்பட்ட விடயத்துக்கு சுயமரியாதையுள்ள எந்த ஊடகவியலாளனும் சான்றாக நிற்கமாட்டான் என்பதால் வித்தியாதரனினால் தன்னுடைய குற்றச்சாட்டை உறுதிப்படுத்தக்கூடியதாக, இருபத்தியைந்து ஆசிரியர்களில் எந்த ஒருவரையும் நிறுத்த முடியாது என்பது எனக்கு உறுதி.

இத்தகைய அடிப்படையற்ற புரளிகளை உங்கள் இணையத்தளத்தில் வெளியிடுவது உங்கள் நிறுவனத்தின் நம்பகத்தன்மையை மோசமாகப் பாதிக்கும்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

1. இந்தக் கடிதத்தில் 'சுடர் ஒளி' ஆசிரியர் தெரிவித்தவை என்று கூறப்பட்ட விடயங்கள் என்னால் கூறப்பட்டவையே.

2. மேற்படி பத்திரிகை ஆசிரியர்கள் சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகல ஆசிரியர்கள் மத்தியிலும் பொதுவாக உரையாற்றிய சமயம் அவர் இவ்வாறு ஏசவில்லை.

3. அதன் பின்னர் சிறு, சிறு கூட்டமாகக் கூடி நின்றபடி காலை உணவை அருந்தும் போதே ஜனாதிபதி மஹிந்த சீற்றத்துடன் இப்படிப் பாய்ந்தார்.

4. அச்சமயம் தகவல் திணைக்களப் பணிப்பாளர் அருகில் இல்லாமல் இருந்திருக்கலாம். 'தினமுரசு' பத்திரிகையாளர்கள் மற்றும் பிறிதொரு தமிழ்த் தினசரியின் ஆசிரியர் உட்பட சுமார் எட்டுப்பத்து ஊடகவியலாளர்கள் அருகில் இருந்தனர். பலருக்கும் இது தெரிந்த விடயம்.

5. ஜனாதிபதி இவ்வாறு 'சுடர் ஒளி - உதயன்' ஆசிரியரை வைதார் என்பது பற்றிய தகவல் அடுத்தவாரம் தினமுரசுப் பத்திரிகையில் மட்டும் விவரமாக வெளிவந்திருந்தது. - ஜனாதிபதியின் கடும் ஏச்சுக்களை 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் சிரித்துச் சமாளித்தார் என்ற சாரப்பட.

6. ஜனாதிபதி தெரிவித்து அவர் சார்பில் இந்த மறுப்பைத் தாம் வெளிப்படுத்துகின்றார் என்று தகவல் திணைக்களப் பணிப்பாளர் குறிப்பிடாததாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோபமாகப் பேசிய மேற்படி சம்பவத்தின்போது தகவல் திணைக்களப் பணிப்பாளர் அருகில் இருக்கவில்லை என்பதாலும் இவ்விடயத்தில் அவரின் மறுப்பை சம்பந்தப்பட்ட ஜனாதிபதியின் தரப்பு மறுப்பாக இதைக் கருதத் தேவையில்லை.

7. நேற்றிரவு வரை இந்த மறுப்பு 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளுக்கு உத்தியோகபூர்வமாகக் கிட்டியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஆ-ர்)

# கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

"எமது கடற்படையினர் கடற்சமர் ஒத்திகை ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். மதியம் தொடங்கிய அந்தப் பயிற்சி, மாலை வரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை'' - என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் சார்பில் பேசவல்ல இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். (சி)

# புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் மூன்று ஊர்காவலர் இருந்தனர் என்றும் அவர்களும் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் படைத்தரப்பினால் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (சி)

# அம்பாறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு படையினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதே பகுதியில், மற்றொரு இடத்தில் நடைபெற்ற மோதலில் நான்கு படையினர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி தொடக்கம் இந்தப் பகுதியில் படையினர் வலிந்த தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த மோதல்கள் தொடர்பாக அரச தரப்பில் இருந்து நேற்றிரவு வரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (அ-1)

# தெல்லிப்பழை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளை படையினர் செய்துவருகின்றனர்.

எதிர்வரும் 11ஆம் 12ஆம் திகதிகளில் இடம்பெறும் திருவிழாக்களில் பக்தர்கள் பங்குபற்ற விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

12ஆம் திகதி கீரிமலையில் இடம்பெறும் தீர்த்தத்திருவிழாவில் பக்தர்கள் பங்குபற்ற வசதியாக அன்று காலை முதல் நண்பகல் வரை தெல்லிப்பழை, சேந்தாங்குளம் சோதனை நிலையங்களில் இருந்து போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு சோதனைநிலையங்களும் அன்று திறந்திருக்குமென்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அமைச்சு அறிவிப்பு*

இதேவேளை-

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் இதுதொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கீரிமலைக் கடலில் தீர்த்தமாடி மக்கள் இறந்த தமது உறவுகளுக்குப் பிதிர்க் கடன்களை மேற்கொள்வதற்கு ஏதுவாகப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் பிதிர்க்கடன் செய்ய விரும்புவோர் தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் இருந்தும் சேந்தாங்குளம் வழியாகவும் கீரிமலைக்குச்சென்றுவர விஷேட பேரூந்துகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (அ-1)

# மன்னார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

அதேவேளை -

மன்னார் தெற்குப் பிரதேசத்தில், கொண்டச்சிக்குளம் பகுதியில் அமைந்திருந்த கடற்புலிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் அந்த முகாம் நாசமாக்கப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

இந்த முகாம் ஆயுதங்களை விநியோகிக்கும் பணியை மேற்கொண்டுவந்தது என்றும் அந்த நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-1)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சிவஞானரத்தினம்



(முன்னாள் பெருந்தெருக்கள் மேற்பார்வையாளர்)

அராலி தெற்கைச்சேர்ந்த சுப்பிரமணியம் சிவஞானரத்தினம் (முன்னாள் பெருந்தெருக்கள் மேற்பார்வையாளர்) 07.08.2007 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபரும், அராலி ஆகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் ஆகியவற்றின் தர்மகர்த்தாவுமான காலஞ்சென்ற சுப்பிரமணியம் - முத்துநாயகி தம்பதியரின் மூத்த புதல்வனும் ஓய்வுபெற்ற அராலிசரஸ்வதி மகாவித்தியாலய ஆசிரியர் தையல் நாயகியின் அன்புக் கணவரும் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் சிவகாந்தனின் பாசமிகு தந்தையும் ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் செந்தில்நாதன், புனிதவதியார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானசௌந்தரியின் மைத்துனரும் கஜநேசன் (லண் டன்), மயூரேசன், யதுர்சன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.08.2007) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலிதெற்கு பூணாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவகாந்தன் (மகன்), செந்தில்நாதன் (சகோதரன்).**

## திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம்

**(ராசக்கா)**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் (ராசக்கா) நேற்று (08.08.2007) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அப்பையா சோமசுந்தரத்தின் அன்பு மனைவி யும் ஞானேஸ்வரியின் (கிளி - ஜேர்மனி) அன்புத் தாயும் தனபாலசிங்கத்தின் (அப்பன்- ஜேர்மனி) அன்பு மாமியும் சிறி தயாளினியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.08.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**66/8, இந்துமகளிர் ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

தகவல்:
**சீவரத்தினம் சிவகுமார் (பேரன்).**

## சின்னத்தம்பி பொன்ராசா



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்ராசா நேற்று (08.08.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பூரணம் தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரி யின் அன்புக் கணவரும் ஜெயக்குமாரி, சூரியகுமாரி, தயாளினி (ஜேர்மனி), உதயகுமார் (லண்டன்), சாந்தகுமாரி (ஆஸ்திரேலியா), சுகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ் கந்தராசா, செல்வரெத்தினம் (லண்டன்), சிவராசா (ஜேர்மனி), ரதி ( லண்டன்), கிருபாலினி (ஆஸ்திரேலியா), கவிதா ஆகியோரின் மாமனும் பூமணி, சிந்தாமணி, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் கனகலிங்கம், நடராசா, பத்மநாதன், பரமேஸ்வரி, வசந்தேஸ்வரி ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஜெயபாஸ்கரன், ஜெகன், ஜெயசீலன், ஜெயரூபன், ஜெயவாகினி, ஜெசிந்தன், ஜெயவாகீசன், ஜனார்த்தன், துஷாந்தினி, தர்சன், ராகுலன், சிறிவக்ஸன், சங்கவி, பிறேமா, கரிதீஸ்சன், தமிழினி, கீர்த்தனா, துஸ்யந்தன், கபி லன், கஸ்தூரி, சாகித்தியன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2007) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மயிலு வீதி,**
**ஆறுகால்மடம்.** (63468)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

B.A. Part I, II (யாழ்)
(சகல பாடங்களும்)
தூரிந் தீட்டல் வகுப்புக்கள்
GAQ, B.A. - I
(யாழ்., பேராதனை)
புதிய பிரிவுகள்
தமிழ் A/L - 2007 கருத்தரங்கு
10.08.2007 - 9 a.m. - 1 p.m. வரை
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.
திகழ் கல்வி நிறுவனம், இணுவில்.

O/L Paper Class
Maths - Mr. F. அருள்நேசன்
Science - Mr. T. ராஜீன்
Tamil - Mr. G. ஜனகன்
(தனிப்பாடம் அனுமதியும் வழங்கப்படும்)
* Eng. Medium Gr. 6 to 10
* Gr. 1 முதல் O/L வரை
SHAMROCK
ஈச்சமோட்டை வீதி, யாழ்.

A/L 2009
இந்து சமயம்
புதிய பிரிவு ஆரம்பம்
11.08.2007
சனி, ஞாயிறு. 10 a.m.
A/L 2008 இந்து நாகரிகம்
பிரிவு II சனி. ஞாயிறு 11 a.m.
By. S. ஜெயக்குமார் B.A. (Hons).
Beacon யாழ். நகர்.

விசேட ஆங்கில வகுப்புக்கள்
6 - 11 English Classes, A/L General - English
University Paper Classes
GAQ, B.A. Part I, II E.S.L
Spoken English,
By : V.S. Robin B.A. (Hons) Dip. in English
K.B. Visagan
ஆரம்பம் - 10.08.2007 (வெள்ளி)
இணுவில் - 3 p.m., மானிப்பாய் - 9 a.m.
திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ். வீதி, இணுவில்.
ஐடியல், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

சாதித்தவர்களைக் கேளுங்கள்
சாதனைக்கான வழியினை
A/L 2008
பௌதிகவியல்
P.S. KUMAR
ஆரம்பம் : 10.08.2007
வெள்ளி : 10.30
Beacon
வெலிங்டன் சந்தி, யாழ்.
பணம் வங்கி

அறிவொளி - NALLUR
CHEMISTRY
அன்பழகன்
A/L - 09, THERMO - Fri - 4
A/L - 08, ORGANIC - Sat, Sun 4.30
INORGANIC - Sat, Sun 3.30
வகுப்புகள் நடைபெறுகின்றன.
(63435)

Study and Work in London
St. Patrick's International College
A 203 year old institution in the
Heart of London where 1600 students
From 40 countries come to study and work
Higher National Diploma in Hospitality
One year study and one year paid internship
Higher National Diploma in Healthcare Management
One year study and one year paid internship
Higher National Diploma in Network Engineering and Telecommunication Systems
2 year study and part time work
Higher National Diploma in Wireless Applications and Mobile Solutions
2 year study and part time work
Higher National Diploma in Business
2 year study and part time work
ALL LEADING TO ONE YEAR BACHELOR AND ONE YEAR MASTER DEGREES
One year full time work after Bachelor or Master degree under new British rules
Interviews and applications at the Office of the Rector, St Patrick's College.
14 St. Patrick's Road, Jaffna.
10:00 am Saturday, 11th August 2007

NATIONAL INSTITUTE OF TECHNICAL EDUCATION OF SRILANKA
AND
THE LEARNING RESOURCE UTILIZATION CENTER OF THE TECHNICAL COLLEGE, JAFFNA IN ASSOCIATION WITH STP COMPUTER WORLD (PVT.) LIMITED
CERTIFICATE IN COMPUTER HARDWARE
தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனம்- இரத்மலானையின் சான்றிதழ்தர கணனி வன்பொருள் பயிற்சிநெறி 01.09.2007 முதல் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் (LRUC) நடைபெறவுள்ளது. செய்முறைப் பயிற்சி வகுப்புகள் STP கணனி நிறுவனத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் யாழ் தொழினுட்பக் கல்லூரி யில் அல்லது STP கணனி நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.
1. Certificate in Computer Hardware- பயிற்சிக் கட்டணம் 3000.00 பயிற்சிக் காலம் 3 மாதம்
2. English Language Skills for Adults- பயிற்சிக் கட்டணம் 3000.00 பயிற்சிக் காலம் 3 மாதம்
அதிபர்
தொழினுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org